வதந்திகளை தொழில்நுட்பம் மூலம் தடுக்க வேண்டும்

ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவர் யோசனை



பயிற்சி முடித்த 2025-ஆம் ஆண்டுப் பிரிவு ஐபிஎஸ் அதிகாரிகள் அறிமுக நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.

புது தில்லி, நவ. 10: மக்களை பீதியில் ஆழ்த்தும் வதந்திகளை நவீன தொழில்நுட்பங்கள் மூலம் தடுக்கும் 'ஸ்மார்ட்' காவல் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று ஐபிஎஸ் பயிற்சி அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஆலோசனை வழங்கினார்.

2025-ஆம் ஆண்டு இந்திய காவல் பணி (ஐபிஎஸ்) பிரிவை சேர்ந்த பயிற்சி அதிகாரிகள், தில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் சந்தித்தனர். அப்போது அவர்கள் மத்தியில் முர்மு பேசியதாவது:

'டீப் ஃபேக்' எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் போலியான காணொலிகள் மற்றும் ஒலிப்பதிவுகள் புதிய வகையான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றன.

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை விட காவல் துறையினர் எப்போதும் ஒரு படி முன்னிலையில் இருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் தவறான தகவல்கள் பரப்பப்படுவது தீவிரமான பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

முக்கியமாக, இளைஞர்கள் இதுபோன்று தவறான பிரசாரங்களால் திசைதிருப்பப்பட வாய்ப்புள்ளது. இத்தகைய திட்டமிட்ட தவறான தகவல் பரப்புதல் உள்ளூர் அளவிலும், பிராந்திய அளவிலும், ஏன் தேசிய அளவிலும் கூட நடைபெற வாய்ப்புள்ளது. இது போன்ற சூழல்கள் மிகப்பெரிய பிரச்னைகளாகவும், கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு சிக்கலானதாகவும் மாறுவதை 'ஸ்மார்ட்' காவல் பணி மூலம் முன்கூட்டியே தடுக்க முடியும்.

காவல் துறை சிறப்பாகச் செயல்படும்போதுதான் அரசின் நிர்வாகமும் சிறப்பாக நடைபெறுவதாக மக்கள் கருதுவார்கள். அரசு நிர்வாக அமைப்பில் பணியாற்றும் சில இளநிலை ஊழியர்கள், உயர் அதிகாரிகளைக் காட்டிலும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் அதிக திறமை பெற்றவர்களாக இருக்க வாய்ப்புள்ளது. எனவே, தங்களது குழுவில் பணியாற்றும் மிக இளநிலை ஊழியர்களிடமிருந்தும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கு அதிகாரிகள் தயங்கக் கூடாது.

காவல் துறையினரின் பணிகளில் பொதுமக்களின் பங்களிப்பையும் ஊக்குவிக்க வேண்டும். காவல் துறை சட்டங்கள், விதிமுறைகள் மூலம் காவல் அதிகாரிகளுக்கு உயர்ந்த அதிகாரம் கிடைக்கிறது. இருப்பினும், அந்த அதிகாரத்தின் அடிப்படையில் மட்டுமே மக்களிடமிருந்து உண்மையான மரியாதையைப் பெற்றுவிட முடியாது.

செயல்பாடுகள், பணித்திறன் மற்றும் கடைப்பிடிக்கும் உயர்ந்த நெறிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் மக்களிடமிருந்து உண்மையான மரியாதையைப் பெற முடியும் என்றார்.

நூற்றாண்டுகளுக்குப் பின்னர்

39 நாகா உடல் பாகங்கள் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலை. திரும்ப ஒப்படைப்பு

திமாபூர்/ கோஹிமா, நவ.10: நாகா சமூகத்தைச் சேர்ந்த 39 பேரின் உடல் பாகங்களை, பிரிட்டனில் உள்ள ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் திரும்ப ஒப்படைத்துள்ளது.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது நாகா மக்களின் பூர்விக பகுதிகளில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட அந்த உடல் பாகங்கள், பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள பிட் ரிவர்ஸ் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தன. கடந்த 1884-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அந்த அருங்காட்சியகத்தில் இருந்த அந்த உடல் பாகங்களில் பெரும்பாலானவை மனித மண்டை ஓடுகளாகும்.

அந்த அருங்காட்சியகத்தில் திங்கள்கிழமை (நவ.9) நடைபெற்ற ஒப்படைப்பு நிகழ்ச்சியின்போது இந்த உடல் பாகங்கள் நாகா நல்லிணக்க மன்றம், நாகா பழங்குடியின பேரவை ஆகிய அமைப்புகளிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக துணைவேந்தர் ஐரீன் ட்ரேசி பேசியதாவது: தற்போது நாகா சமூகத்தைச் சேர்ந்தவர்களின் உடல் பாகங்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பது ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம், நாகா மக்கள் இடையிலான உறவில் வரலாற்று சிறப்புமிக்க தருணமாகும் என்று தெரிவித்தார்.

நாகா நல்லிணக்க மன்றம் சார்பில் பேராசிரியர் விசியர் சான்யு பேசுகையில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது நாகா சமூகத்தினர் மீது நடத்தப்பட்ட வன்முறை குறித்து பேசினார். தனது சொந்த கிராமத்தை ஆங்கிலேய படைகள் எப்படி தீயிட்டு கொளுத்தி அழித்தன என்பதை அவர் நினைவுகூர்ந்தார்.

இந்த உடல் பாகங்கள் நாகாலாந்து கொண்டுவரப்பட உள்ளன. அந்த மாநில தலைநகர் கோஹிமாவில் உள்ள நாகா பூங்காவில் உடல் பாகங்களை அடக்கம் செய்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

307 ஆண்டுகள் பழைமையான மகாபாரத ஓலைச் சுவடிக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்!

கொல்கத்தா, நவ. 10: மேற்கு வங்க மாநிலம் விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்படும் சுமார் 307 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மகாபாரத ஓலைச்சுவடி, யுனெஸ்கோவின் ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான உலக நினைவுப் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவேடு, ஆசிய-பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த பழங்கால கையெழுத்துப் பிரதிகள், புத்தகங்கள், ஆவணங்கள், ஒலி-ஒளி பதிவுகள் போன்ற கலாசாரம்-மரபு-அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணப் பாரம்பரியங்களின் அதிகாரபூர்வ தொகுப்பாகும்.

மேற்கு வங்க மாநிலம், சாந்திநிகேதனில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்படும் சுமார் 307 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மகாபாரத ஓலைச் சுவடி யுனெஸ்கோவின் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளது. 221 ஏடுகளைக் கொண்ட இந்த ஓலைச் சுவடி, வியாச முனிவரால் பண்டைய காவிய சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட மகாபாரத இதிகாசத்தின் 18 பருவங்களில் ஒன்றான கர்ண பருவத்தை ஆவணப்படுத்துகிறது.

'யுனெஸ்கோ அங்கீகாரத்தின் மூலம் விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் லிபிகா களஞ்சியத்தில் உள்ள கையெழுத்துப் பிரதி தொகுப்புக்கு மிகப் பெரிய கவனம் கிடைக்கப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் வரலாறு-இலக்கியம் சார்ந்த ஆய்வுப் பணிகளுக்கு மேலும் உத்வேகமளிப்பதாக அமைந்துள்ளது. மத்திய அரசின் ஞான பாரதம் முன்னெடுப்பின்கீழ், நிபுணர் குழு உதவியுடன் லிபிகா களஞ்சியத்தில் உள்ள ஆயிரக்கணக்கான அரிய கையெழுத்துப் பிரதிகளின் எண்மமயமாக்கல் பணிகள் நடைபெற்று வருகின்றன' என்று பல்கலைக்கழக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் லிபிகா களஞ்சியத்தில் சம்ஸ்கிருதம், வங்கம் மற்றும் பிற 4 மொழிகளில் எழுதப்பட்ட பழைமையான கையெழுத்துப் பிரதிகள் பாதுகாக்கப்படுகின்றன.

கழிவுகள் விற்பனைமூலம் ரூ.10 கோடி வருவாய்

புது தில்லி, நவ.10: கழிவுப் பொருள்கள் விற்பனைமூலம் ரூ. 10.17 கோடி வருவாயை மத்திய உள்துறை அமைச்சகம் ஈட்டியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் உள்ள மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு தொடர்புடைய அலுவலகங்களில் கடந்த செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் கட்டமாகவும், அக்டோபர் 2-ஆம் தேதியும் தூய்மை பிரசாரம் தொடங்கப்பட்டது. இதற்கு முதலில் 6,757 இடங்கள் அடையாளம் காணப்பட்டு, பின்னர் 7,963 இடங்களாக விரிவுபடுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் மின்னணு கழிவுகள் விற்பனை மூலம் ரூ. 2.63 கோடி உள்பட ஒட்டுமொத்த கழிவுகள் விற்பனைமூலம் ரூ.10.17 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 11,902 புகார்களுக்கும், 1,666 மேல்முறையீடுகளுக்கும் தீர்வளிக்கப்பட்டது. 2,19,644 அசல் கோப்புகளும், 30,385 மின்னணு கோப்புகளும் மதிப்பாய்வு செய்யப்பட்டன. திறமையான ஆவண மேலாண்மை மற்றும் தேவையற்ற பொருள்கள் அகற்றம் மூலம் 78,125 சதுர அடி அலுவலக இடம் காலியானது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரபல மலையாள திரைப்பட ஒளிப்பதிவாளர் ஷாஜி குமார் மரணம்

கொச்சி, நவ. 10: பிரபல மலையாள திரைப்பட ஒளிப்பதிவாளர் ஷாஜி குமார் திடீர் மாரடைப்பால் செவ்வாய்க்கிழமை காலமானார். அவருக்கு வயது 57.



மோகன் லால் நடித்த புலிமுருகன், நரன், தொடரும் உள்ளிட்ட வெற்றித் திரைப்படங்களில் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியவர் ஷாஜி குமார். தற்போது உல்லாஸ் கிருஷ்ணா இயக்கத்தில் திலீப் நடித்துவரும் திரைப்படத்தின் படப்பிடிப்புக்காக கொச்சியில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் அவர் தங்கியிருந்தார். கடந்த சனிக்கிழமை இரவில் ஷாஜி குமாருக்கு திடீரென உடல்நல பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து, அங்குள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது உடல்நிலை சற்று தேறிய நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவில் மீண்டும் மோசமடைந்தது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை மாரடைப்பு ஏற்பட்டு, அவர் மரணமடைந்ததாக திரைத் துறையினர் தெரிவித்தனர்.

பழம்பெரும் ஒளிப்பதிவாளர் விபின் மோகனிடம் உதவியாளராக இருந்த ஷாஜி குமார், பின்னாளில் முன்னணி ஒளிப்பதிவாளராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். ஜோஷி, ஷாஜி கைலாஸ், வி.எம்.வினு, எம்.பத்மகுமார், வைசாக் போன்ற பிரபல இயக்குநர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

புலிமுருகன், நரன், தொடரும், அதிமனோஹரம், ராமலீலா, ஒடியன், மதுர ராஜா, இட்டிமாணி: மேட் இன் சீனா, நைட் டிரைவ், பத்தொன்பதாம் நூற்றாண்டு, பாந்த்ரா, ஒன்ஸ் அப்பான் எ டைம் இன் கொச்சி, ஒற்றக்கொம்பன் உள்ளிட்ட மலையாள திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஷாஜி குமார், பெரும்பாவூரில் வசித்துவந்தார். அவரது மறைவுக்கு கேரள முதல்வர் வி.டி.சதீசன், நடிகர் மோகன் லால், மத்திய அமைச்சரும் நடிகருமான சுரேஷ் கோபி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கேரள அரசு நிகழ்ச்சியில் வந்தே மாதரம் முழு பாடலுக்கு அமைச்சர் அதிருப்தி

பாதியிலேயே அமர்ந்ததால் சர்ச்சை

காசர்கோடு, நவ. 10: கேரளத்தின் காசர்கோடு மாவட்டத்தில் மாநில அரசு நிகழ்ச்சியில் வந்தே மாதரம் பாடல் முழுமையாக பாடப்பட்டதால் அதிருப்தியடைந்த சுகாதாரத் துறை அமைச்சர் கே.முரளீதரன், பாதியிலேயே தனது இருக்கையில் அமர்ந்ததால் சர்ச்சை எழுந்துள்ளது.

வந்தே மாதரம் பாடலை அவமதித்த அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பாஜக வலியுறுத்தியுள்ளது. அதேநேரம், தனது செயலை நியாயப்படுத்தியுள்ள கே.முரளீதரன், 'மாநில அரசு நிகழ்ச்சியை தங்களின் அரசியல் சித்தாந்தத்துக்காக எவரும் பயன்படுத்த முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது' என்றார்.

மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த பிப்ரவரியில் வெளியிட்ட வழிகாட்டுதல்களின்படி, அரசு விழாக்கள் மற்றும் பள்ளிகளில் தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் ஆறு சரணங்களையும் பாட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

இந்தப் பாடலை அவமதிப்பது மற்றும் இடையூறு விளைவிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் சட்டம், கடந்த ஜூலையில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, வந்தே மாதரம் பாடலை அவமதித்தால் அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

கேரள மாநில அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரத்தின் 2 சரணங்கள் மட்டுமே பாடப்படும் என்பது காங்கிரஸ் கூட்டணி அரசின் நிலைப்பாடாக உள்ளது.

இந்தச் சூழலில், காசர்கோடு மாவட்டத்தின் முள்ளேரியா குடும்ப சுகாதார மையத்தில் புதிய ஆய்வக திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.



கே. முரளீதரன்

மாநில சுகாதார அமைச்சர் கே.முரளீதரன் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில், பாஜகவைச் சேர்ந்த ஊராட்சி உறுப்பினர்கள் இருவர் வந்தே மாதரம் முழுப் பாடலையும் பாடினர்.

இதனால் அதிருப்தியடைந்த முரளீதரன், பாதியிலேயே தனது இருக்கையில் அமர்ந்ததுடன், அருகில் இருந்தவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். இது தொடர்பாக வெளியான விடியோவில், அமைச்சருடன் காசர்கோடு காங்கிரஸ் எம்.பி. ராஜ்மோகன் உண்ணித்தான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்எல்ஏ கே.மாஹின், மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதன்யா சுரேஷ் ஆகியோரும் வந்தே மாதரம் பாடல் நிறைவடையும் முன்பே இருக்கையில் அமர்ந்த காட்சிகள் உள்ளன. காங்கிரஸ் எம்எல்ஏ கே.நீலகண்டன், கட்சியின் மாவட்ட தலைவர் பி.கே.ஃபைசல் ஆகியோர் பாடல் நிறைவடையும் வரை நின்றிருந்தனர்.

பாஜக புகார்: தனது செயலுக்காக அமைச்சர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று காசர்கோடு மாவட்ட பாஜக தலைவர் எம்.எல்.அஸ்வினி வலியுறுத்தியுள்ளார்.

வந்தே மாதரம் பாடலை அவமதித்ததாக அமைச்சர் உள்ளிட்டோருக்கு எதிராக பாஜக தரப்பில் காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் விளக்கம்: தனது செயலை நியாயப்படுத்தி, அமைச்சர் கே.முரளீதரன் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

நான் சுதந்திரப் போராட்ட வீரனின் மகன். எனக்கு தேச பக்தி குறித்து யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை.

மத்திய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் நடைபெறும் விழாக்களில் அவர்களின் நடைமுறையுடன் மாநில அரசு ஒத்துழைக்கும். அதேநேரம், மாநில அரசு விழாக்களில் வந்தே மாதரத்தின் இரு சரணங்கள் மட்டுமே பாடுவது என்பது எங்களின் கொள்கை. அதை மீறியதற்காக, எனது எதிர்ப்பை பதிவு செய்தேன்.

மாநில அரசு நிகழ்ச்சியை தங்களின் அரசியல் சித்தாந்தத்துக்காக யாரேனும் பயன்படுத்த முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது என்றார்.

இவர், மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் முதல்வருமான கே.கருணாகரனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

TAMIL NADU STATE AGRICULTURAL MARKETING BOARD
E-Tender Notice
Tender Notice No.T.12 / Sr.DO / F.1157 / 2026 / Dated.10.11.2026
Lumpsum Contract

For and on behalf of the Governor of Tamil Nadu, the Executive Engineer, Tamil Nadu State Agricultural Marketing Board, Guindy, Chennai-32, invites ONLINE tenders for the under mentioned works from the PWD/WRD registered contractors of appropriate class.

Sl NO	Name of Work	Value put to tender (Rs. In Lakhs) Approx.	EMD Rs. (Including GST)
1	Construction of Integrated Agricultural Extension Centre (IAEC) at Katpadi in Vellore District	235.34	2,78,000/-
2	Construction of Integrated Agricultural Extension Centre (IAEC) at Gudiyatham in Vellore District	259.49	3,07,000/-
3	Establishment of 100 MT cold storage at Keeramangalam Block in Pudukottai District	103.50	1,23,000/-

Important dates: 1. Last date and time of receipt of tender through online : 30.11.2026 upto 5:45 PM
2. Downloading the tender document by free of cost : 16.11.2026 to 30.11.2026 upto 5.45 PM
3. Date and time of opening e-Tender : 01.12.2026 from 12.15 PM onwards
4. For further details please visit website https://tntenders.gov.in
5. Period of Completion - S.No. 1 & 2-12 Months, Sl. No. 3-8 Months.

Note: i) It is the responsibility of the tenderer to check any corrigendum issued for any correction or modification uploaded subsequently in website, the same shall be taken into account while submitting tender.
ii) The Tender Authority does not take any responsibility for the delay / non-submission of tender/non-reconciliation of online payment caused due to non- availability of internet connection, network traffic / holidays or any other reasons.
iii) Tender may be cancelled at any stage by competent authority.
iv) Cost of EMD will be paid through online mode i.e. internet payment gateway (Credit/Debit), Net banking, NEFT/RTGS.

DIPR / 3476 / Tender / 2026 — Executive Engineer, TNSAMB, Chennai - 32.

इंडियन बैंक Indian Bank ALLAHABAD

தண்டராம்பட்டு கிளை

வாகன ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த **இந்தியன் வங்கி தண்டராம்பட்டு கிளையின்** அதிகாரப்பூர்வ அலுவலரால் **நேரடி சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்து **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ளது என்னவோ அது"** எனும் முறையில் ஈடு பெற்றுக் கடனளித்த **இந்தியன் வங்கி தண்டராம்பட்டு கிளைக்கு** பின்வரும் கடன்தாரரிடம் வரவேண்டிய **ரூ.9,16,150/- (ரூபாய் ஒன்பது லட்சத்து பதினாறாயிரத்து நூற்றம்பது மட்டும்) (04.11.2026** அன்றுள்ளபடி**)** நிலுவைத் தொகையை வசூலிக்கும்பொருட்டு **27.11.2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

திரு.குமரேசன், த/பெ சுப்ரமணி, 707, அகரம்பள்ளிப்பட்டு மெயின் ரோடு, தென்முடியனூர், செங்கம், திருவண்ணாமலை 606707.

மின் - ஏல முறை மூலம் விற்பனைக்குக் கொண்டுவரப்பட உள்ள சொத்தின் குறிப்பிட்ட விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

மின் ஏலத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ள அடமானச் சொத்துகள் விபரம்:	ACE Tractor Model: DI 550 (55HP) RC TN25CM4813 Engine: A50TXBD0019736 Chassis No: LBE550051939
சொத்தின் மீது வில்லங்கங்கள்	இல்லை
குறைந்தபட்ச கேட்பு விலை	**ரூ.7,20,000/-**
டேவணித் தொகை	**ரூ.72,000/-**
ஏல உயர்வுத்தொகை	10,000/-
மின் - ஏல நாள் மற்றும் நேரம்	27.11.2026 & காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
சொத்து அடையாள எண்	IDIB8041930257

இணைய வழி ஏலத்தில் கலந்து கொள்ள எங்கள் மின்-ஏலச் சேவை வழங்குநரான PSB அலையன்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்தின் (https://baanknet.com) இணையத்தளத்தை அணுகுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிகளுக்கு அழையுங்கள் 8291220220 பதிவு செய்து கொண்டது தொடர்பான நிலவரங்கள் மற்றும் டேவணித்தொகை (EMD) செலுத்தியது தொடர்பான நிலவரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்க support.baanknet@psballiance.com

சொத்து விவரங்களுக்கும் சொத்தின் புகைப்படத்துக்கும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் தயவு செய்து அணுகுக: https://baanknet.com. மேலும் இந்த இணையத்தளம் தொடர்பான விவரங்களுக்கு PSB அலையன்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனத்தை தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 8291220220

சொத்தை https://baanknet.com. என்ற இணையத்தளத்தில் தேடும்போது மேலே குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணைப் பயன்படுத்துமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நோடல் வங்கி கணக்கு எண். கணக்கு பெயர்	கிளை பெயர் மற்றும் IFSC குறியீடு
CA- 6241208376 INDIAN BANK, ZONAL OFFICE	Indian Bank, Tiruvannamalai Main Branch, IFSC-IDIB000T045

நாள்: 10.11.2026
இடம்: தண்டராம்பட்டு
கிளை அலுவலர் / அதிகாரப்பூர்வ அலுவலர்
இந்தியன் வங்கி

Piramal Finance

பிரமல் ஃபைனான்ஸ் லிட். CIN:L64910MH1984PLC032639

பதிவு அலுவலகம்: அலகு எண் 601,6ஆவது தளம், பிரமல் அமிட்டி கட்டடம், பிரமல் அகஸ்டியா கார்ப்பரேட் பார்க், கமானி சந்திப்பு, தீயணைப்பு நிலையம் எதிரில்,LBS மார்க், குர்லா (மேற்கு), மும்பை-400070| தொ.பே.:+912238024000.
கிளை அலுவலகம்: கல்பலதிகா டவர்ஸ், மூன்றாவது தளம், புதிய எண் 36, பழைய எண் 24, டாக்டர் அம்பேத்கர் சாலை, அசோக் நகர் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024. | **தொடர்பு நபர்:1. பிரமல் ஃபைனான்ஸ் லிட்.022-69482444**

E-ஏல விற்பனை அறிவிப்பு - தொடர்நிலை விற்பனை

கீழ்க்காணும் கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு **கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம்,2002**-இன் கீழ் பிரமல் ஃபைனான்ஸ் லிட்.,(முன்பு பிரமல் கேப்பிட்டல் & ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., என அறியப்பட்டது) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கீழே குறிப்பிட்டுள்ள கடனீட்டுச் சொத்தைச் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கீழே விவரிக்கப்பட்டுள்ளதும் சுவாதீனத்தில் உள்ளதுமான அந்த அசையாச் சொத்தை **"உள்ளது உள்ள இடத்தில்","உள்ளது உள்ளபடி","உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் வாங்கக் கீழே கையொப்பமிட்டுள்ளவர் விலைகோரல்களை வரவேற்கிறார். இதற்கான விவரங்கள் பின்வருமாறு:

கடன் எண் / கிளை / கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமின்தாரர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	சொத்து முகவரி _ இறுதியானது	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD) (குறைந்தபட்ச விலையில் 10%)	நிலுவைத் தொகை (05-11-2026)
கடன் குறியீடு எண்: HLSA00086231 & HLSA00086231TU புதுச்சேரி (கிளை) மணிகண்டன் ஜெகநாதன் (கடன்தாரர்) கார்த்திகா தேவி (கூட்டுக் கடன்தாரர் 1)	நாள்: 24-01-2025 ரூ. 8,59,765/- (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று அறுபத்தைந்து மட்டும்) மற்றும் நாள்: 24-01-2025 ரூ.8,59,765/- (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எழுநூற்று அறுபத்தைந்து மட்டும்)	தமிழ்நாடு, விழுப்புரம்-604303, திண்டிவனம் பதிவு மாவட்டம், மரக்காணம் சார்பதிவு மாவட்டம் மற்றும் பேரூராட்சி, சீவார்டு சாலை, மரக்காணம் தெற்கு கிராமம், மருதமலை நகர், சர்வே எண் 636/1, பழைய சர்வே எண்கள் 635/2,635/3, புதிய சர்வே எண் 636/20, மனை எண் 45-இல் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: மனைப்பிரிவுச் சாலை. மேற்கு: மனை எண் 44. கிழக்கு: மனை எண் 46. தெற்கு: மனை எண் 51.	ரூ. 7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ.75,000/- (ரூபாய் எழுபத்தைந் தாயிரம் மட்டும்)	ரூ.6,73,175.74/- (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நூற்று எழுபத்தைந்து மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்) மற்றும் ரூ.5,58,721.74/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து எழுநூற்று இருபத்தொன்று மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்)
கடன் குறியீடு எண்:04900002418 & 04900003173 புதுச்சேரி (கிளை) சிவகுமார் R (கடன்தாரர்) நவநீதம் R (கூட்டுக் கடன்தாரர் 1)	நாள்: 23-07-2021 ரூ. 5,51,468/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து நானூற்று அறுபத்தெட்டு மட்டும்) மற்றும் நாள்: 26-02-2022 ரூ.4,83,209/- (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூற்று ஒன்பது மட்டும்)	தமிழ்நாடு, கடலூர்-608601, சிதம்பரம் வட்டம், மேலமணக்குடி கிராமம், பிள்ளையார் கோவில் தெரு, R.S. எண் 85/10, புதிய சர்வே எண் 85/10B-இல் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: விநாயகமூர்த்தியின் மனை. மேற்கு: விநாயகமூர்த்தியின் மனை. கிழக்கு: சாலை. தெற்கு: சாலை.	ரூ. 10,90,000/- (ரூபாய் பத்து இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)	ரூ.1,09,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்)	ரூ.7,80,377.18/- (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பதாயிரத்து முந்நூற்று எழுபத்தேழு மற்றும் பதினெட்டு பைசா மட்டும்) மற்றும் ரூ.7,21,483.25/- (ரூபாய் ஏழு இலட்சத்து இருபத்தோராயிரத்து நானூற்று எண்பத்து மூன்று மற்றும் இருபத்தைந்து பைசா மட்டும்)
கடன் குறியீடு எண்:04900002997 புதுச்சேரி (கிளை) கோபாலகிருஷ்ணன் TK(கடன்தாரர்) கௌதமன் G(கூட்டுக் கடன்தாரர் 1)	நாள்: 31-05-2021 ரூ.4,37,682/- (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுநூற்று எண்பத்திரண்டு மட்டும்)	தமிழ்நாடு, கடலூர்-607002, கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், திம்மராவுத்தன்குப்பம் கிராமம், புதிய சர்வே எண் 46/11-இல் அமைந்துள்ள சொத்தின் அனைத்துப் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ராமச்சந்திரனின் மனை. மேற்கு: ராமச்சந்திரனின் மனை. கிழக்கு: ராமச்சந்திரனின் மனை. தெற்கு: ராமச்சந்திரனின் மனை.	ரூ. 6,90,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)	ரூ.69,000/- (ரூபாய் அறுபத்தொன்பதாயிரம் மட்டும்)	ரூ.11,09,259.11/- (ரூபாய் பதினொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பத்தொன்பது மற்றும் பதினொரு பைசா மட்டும்)

E-ஏல நாள்:27-11-2026, முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்). ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி நாள்:26-11-2026, மாலை 4.00 மணிக்கு முன்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அறிய www.piramalfinance.com/e-Auction.html எனும் முகவரியில் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும் அல்லது piramal.auction@piramal.com எனும் மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டத்தின் கீழ் கடன்தாரர் / ஜாமின்தாரர் / அடமானதாரருக்கான சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பு

மேற்கூறிய கடன்தாரருக்கு / ஜாமின்தாரருக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை நாளது வரை சேர்ந்துள்ள வட்டியுடன் ஏல நாளுக்கு முன் முழுமையாகச் செலுத்த வேண்டும். தவறினால் சொத்து ஏலமிடப்படும் / விற்கப்படும். நிலுவைத் தொகை ஏதேனும் எஞ்சியிருப்பின், அதுவும் கடன்தாரரிடமிருந்து / ஜாமின்தாரரிடமிருந்து வட்டி மற்றும் செலவினத்துடன் திரும்பப் பெறப்படும்.

கடனீட்டுச் சொத்தை மீட்பதற்குக் கிடைக்கப்பெறும் காலக்கெடு தொடர்பாக மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன் நெறிமுறைகளின்பால் கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் தெரிவிப்பது யாதெனில், மேற்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ள ஏலம் எந்தக் காரணத்தினாலாவது தோல்வியடைந்தால், தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் தனது ஈட்டுரிமையை அமல்படுத்தலாம்.

நாள்:11.11.2026
இடம்: சென்னை RPU
ஒப்பம்/-(அதிகாரப்பூர்வ அலுவலர்), பிரமல் ஃபைனான்ஸ் லிட்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.25, 25A & 26, தரைத்தளம், சாவடி சாலை, பாப்பநாயக்கன் திருப்பாபுலியூர், கடலூர், தமிழ்நாடு - 607002

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	07.11.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1197210170000043 1.Mrs.அமுதா V 2.Mr.வீரபத்திரன்	(I) 22.12.2021 21.12.2021 அன்றுள்ளபடி ₹ 5,83,849/- (ரூபாய் ஐந்து லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 07.07.2022 & நேரடி சுவாதீனம் - 20.08.2024	₹ 10,59,696.04 (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஆறு மற்றும் பைசா நான்கு மட்டும்)	₹ 2,26,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்து ஆறாயிரம் மட்டும்)	₹ 22,600/- (ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்)

சொத்து விவரம்: கடலூர் பதிவு மாவட்டம், நெல்லிக்குப்பம் சார் பதிவு எல்லைக்குட்பட்ட விலங்கல்பட்டு கிராமம், குழந்தை குப்பம் தெரு, கடலூர் பஞ்சாயத்து யூனியன் எல்லை, மறு சர்வே எண்.100/7, 0.14.5, பழைய சர்வே எண்.179/3 - ஏக்கர் 2.01 சென்டு, இதில் ஏக்கர் 0.09½ சென்டு, இதில் ஏக்கர் 0.06½ சென்டு, இதில் ஏக்கர் Ac 0.03 சென்டு நிலத்தில் 1308 சதுர அடி, 121¾ சதுர மீட்டர் நிலம் மற்றும் அதில் செங்கற்களால் கட்டப்பட்டுள்ள RCC கூரையிட்ட குடியிருப்பு கட்டிடம் அதனுடன் மின்சார இணைப்புகள், பொருத்தப்பட்டுள்ளவைகள் மற்றும் டெபாசிட்டுகள், அதனுடன் அனைத்து உபகரணங்கள், அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: தெருவுக்கு தெற்கு, ராமசாமி நிலத்திற்கு வடக்கு, ராதாகிருஷ்ணன் மனைக்கு கிழக்கு, தர்மலிங்கம் மனைக்கு மேற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 26.11.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
25.11.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	24.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.ஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 11.11.2026
ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்